**இந்திய உயர் ஸ்தானிகராலயம்**

**கொழும்பு**

****************

**<u>ஊடக அறிக்கை</u>**

**இலங்கையில் சிக்கியிருந்த இந்தியர்களுடான மூன்றாவது விசேட விமானம் இலங்கையிலிருந்து இந்தியாவுக்கு புறப்பட்டது**

**200 க்கும் அதிகமான இலங்கையர்களும் நாடு திரும்பினர்**

இலங்கையில் சிக்கியிருந்த 242 இந்திய பிரஜைகள் விசேட ஏர் இந்தியா விமானம் (AI 02802) மூலமாக 2020 ஜூன் 22 ஆம் திகதி கொழும்பிலிருந்து டில்லி, காயா மற்றும் லக்னோவுக்கு அனுப்பிவைக்கப்பட்டனர். கொவிட்19 காரணமாக நாடு திரும்ப முடியாத நிலையில் உலகளவில் சிக்கியிருக்கும் இந்திய பிரஜைகளை இந்தியாவுக்கு அனுப்புவதற்கான, இந்திய அரசின் "வந்தே பாரத் மிஷன்" திட்டத்தினுடைய ஓர் அங்கமாக இந்த விமானப் பயணம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

2. பண்டாரநாயக்கா சர்வதேச விமான நிலையத்தில் இந்திய பிரஜைகளை சந்தித்திருந்த இந்திய உயர் ஸ்தானிகர் கௌரவ கோபால் பாக்லே அவர்கள், அப்பயணிகளின் பாதுகாப்பான பயணத்துக்காக வாழ்த்துக்களையும் பகிர்ந்திருந்தார். இந்திய பிரஜைகளை சொந்த நாட்டுக்கு அனுப்பும் நடவடிக்கைகளில் இலங்கை அரசாங்கத்தினதும் மக்களினதும் ஒத்துழைப்புக்காகவும் அவர் நன்றிகளை தெரிவித்தார். இவ்விமான சேவை மற்றும் 2020 மே 29 ஆம் திகதி புறப்பட்ட விசேட ஏர் இந்தியா விமானம், ஜூன் முதலாம் திகதி கொழும்பிலிருந்து தூத்துக்குடிக்கு மேற்கொள்ளப்பட்ட இந்திய கடற்படை கப்பல் ஜலஷ்வாவின் பயணிகள் சேவை, ஜூன் 15 ஆம் திகதி மேற்கொள்ளப்பட்ட விசேட ஏர் இந்தியா விமான சேவை, ஏனைய விசேட விமான சேவைகள் உட்பட்ட சேவைகள் மூலமாக இதுவரை கிட்டத்தட்ட 1500 பிரஜைகள் இலங்கையிலிருந்து இந்தியாவுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளனர்.

3. இலங்கை அரசாங்கத்தின் ஒத்துழைப்புடன் இந்த ஏர் இந்தியா விமானம் மூலமாக 202 இலங்கையர்களும் இந்தியாவிலிருந்து நாடு திரும்பியுள்ளனர்.

4. நாடு திரும்ப முடியாமல் இலங்கையில் தங்கியிருக்கும் இந்தியர்கள் இதுவரையில் தம்மை இந்திய உயர் ஸ்தானிகராலயத்தின் இணையத்தளத்தில் பதிவு செய்ய தவறியிருப்பின் கீழ்வரும் இணையத்தளத்தில் பதிவு செய்யுமாறு கோரப்படுகிறார்கள் https://hcicolombo.gov.in/COVID_helpline நாடு திரும்ப முடியாமல் இலங்கையில் தங்கியிருக்கும் இந்திய பிரஜைகள் இந்திய உயர் ஸ்தானிக ராலயத்தின் இணையத்தளம் மற்றும் சமூக ஊடகங்களில் பதிவிடப்படும் அறிவித்தல்களை அறிந்து கொள்ளுமாறு ம் நாம் கோரிக்கை விடுக்கின்றோம்.

****

கொழும்பு

சக வருடம் 1942 ஆஷாட 02

23 ஜூன் 2020